மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) ஆம்.

(இ) இது சம்பந்தமாக ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் குற்ற எண் 550/77-ல் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டு புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.

(உ) (எ) குறுக்குத் தடுப்பு முற்றிலும் உடைக்கப்படாததால் நிலங்கள் எதுவும் பாசன வசதியின்றி பாதிக்கப்படவில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : இந்த 'கிராஸ் பார்' உடைக்கப்பட்டது எப்போது? வழக்கு பதிவு செய்யப்பட்டது எப்போது? வழக்கு குறித்த சார்ஜ் ஷீட் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இது சம்பந்தமாக யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அந்தக் குறிப்புகள் என்னிடம் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால், அந்தக் குறிப்புகளைச் சேகரித்துத் தருகிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : இது சம்பந்தமான வழக்கு பதிவு செய்யப் பட்டதே தவிர, சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவில்லை என்ற தகவல்தான் என்னிடம் இருக்கிறது. எனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் காவல் துறைக்கு அறிவுறுத்தி, வழக்கை விரைவுபடுத்துவாரா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து, உடைந்த பகுதியின் காரணமாக பெருமளவு நிலங்கள் பயிரிடப்படாத நிலை இல்லாமல் இருந்தாலும், ஒரு பகுதி வரவேண்டிய தண்ணீர் வராமல் இருக்கிறது. எனவே உடைப்பைச் சரி செய்வதற்கு உடனடியாக உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்று நான் என்னுடைய பதிலில் சொல்லியிருக்கிறேன். குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அடுத்து, உடைப்பு பெருமளவுக்கு இல்லாத காரணத்தால், பாசனம் அதிகமாக பாதிக்கப்படவில்லை என்று எனக்குத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. அப்படி ஏதேனும் பாதிப்பு இருந்தால், அந்த உடைப்பை அடைப்பதற்கு நிச்சயமாக ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*132 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal with the Government to enact comprehensive land reforms in the State; and

(b) if so, the details thereof?

1978 பிப்ரவரி 25]

விரிவான நிலச் சீர்திருத்தங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் விரிவான நிலச் சீர்திருத்தங்களை அடங்கல் சட்டமியற்றிச் செயல்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : (அ) & (இ) 1961 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தில் பலவகை உள்ளிட்ட திருத்தங்கள் கொண்டுவருவது குறித்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : சென்றமுறை நிறைவேற்றப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் மத்திய அரசினுடைய கொள்கைகளுக்கும், குறிக்கோள்களுக்கும் இணக்கமாக இல்லை என்றும், அப்படி இணக்கமில்லாத முறையில் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவந்த மாநிலங்களில் தமிழ் நாடு ஒன்று என்றும், ஆகவே விரைவில் தமிழ் நாட்டு நிலச் சீர்திருத்தச் சட்டம் மத்திய அரசின் குறிக்கோள்களுக்கு இணங்க அமைக்கப்பட வேண்டுமென்றும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசாங்கத்தால் தாக்கீது அனுப்பப் பட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் படித்தேன். இது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

இரண்டாவது எந்தமாதிரியான நிலச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வருவதாக தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது என்பதுபற்றி அமைச்சர் அவர்கள் இங்கே விளக்குவார்களா ?

மூன்ருவதாக, குத்தகைதாரர்களுக்கு நிலத்தை உடைமையாக்கும் வகையில் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமுலாக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : உறுப்பினர் அவர்கள் மூன்று கேள்விகளை ஒரே நேரத்தில் கேட்டிருக்கிருர்கள். ஒவ்வொன்ருக நினைவுறுத்தி பதிலளிக்க விரும்புகிறேன்.

நிலச் சீர்திருத்தங்கள் எனப்படுவன நில உச்ச வரம்புச் சட்டங்கள், குத்தகைச் சட்டங்கள், குடியிருப்புகளில் உடைமையாக்கும் உரிமையை அளித்தல் ஆகியவைகள் உட்பட்டனவாகும். குத்தகைச் சட்டங்கள்பற்றியும், குடியிருப்புகளை உடைமையாக்கும் உரிமை பற்றியும் பலவகையான உள்ளிட்ட சட்டமியற்றும் உத்தேசம் ஏதுமில்லை.

நில உச்ச வரம்புச் சட்டத்தைப் பொறுத்த மட்டில், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தில் மத்திய அரசின் வழிமுறைகளுக்கு உகந்தாற்போலவும், நீதி மன்றங்களின் சில முரண்பாடான தீர்ப்புகளுக்கு மாற்று காண்பதன் மூலமும் சட்டத்தை அமுல்படுத்தும் முறைகளை எளிதாக்குவதற்கும் திருத்தங்கள் கொண்டுவர அரசு பரிசீலித்து வருகிறது. நிலச் சீர்திருத்தச் சட்டங்களுக்கு பல திருத்தங்களைக் கொண்டுவரும் உத்தேசம் வருவாய் வாரிய உறுப்பினர் (நிலச் சீர்திருத்த ஆணையர்), அரசு வருவாய்த் துறைச் செயலாளர், சட்டத் துறைச் செயலாளர் ஆகிய அதிகாரிகள் நிலையில் விவாதிக்கப்பட்டு, அமைச்சரவைக் கூட்டத்தின் பரிசீலனையில் வைப்பதற்கு முன் நிதி அமைச்சருடனும், சட்ட அமைச்சருடனும் கலந்து ஆலோசித்து முடிவெடுக்கப் பட்டுள்ளது.

அந்த முடிவை ஒட்டி நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கு பல வகையான உள்ளிட்ட திருத்தங்கள் தகுந்த சட்டத் திருத்தத்தின் மூலம் காலக்கிரமத்தில் சட்டமன்றத்தில் கொண்டு வரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, is "Land Reforms" a State subject, a concurrent subject or a Central subject? If it is a State subject, why is it necessary for use to follow any national guidelines in this respect?

THE HON. THIRU K. MANOHARAN: Sir, to the pointed question of the hon. Member, I would state that we have already committed that we are following the national guidelines. Of course, it is our subject and I do not deny it. But I want to draw the attention of the hon. Member to the fact that a Minister from the Central Government, while he came to Madras, had categorically said that it was well within the competence of the State Government either to retain the Urban Ceiling Act or to amend it or to accept or reject it. That is what he said. But after having got it and after it has been implemented in certain States, we think it is better to follow the national guidelines. Within the framework of the national guidelines, we are going to frame our own measure. So, when we take it up and when it comes to a final shape, the hon. Member will find that, in all respects, it is going to be almost a new one of our own.

THIRU A. R. DAMODARAN: Sir, I am afraid the Hon. Minister has misunderstood my question. I am referring to land reforms, the agricultural land ceiling and not the urban land ceiling. I know that Central guidelines have been given even in the case of agrarian reforms and I wanted to know why, in view of the differences that

1978 பிப்ரவரி 25]

existed between State and State, the Tamil Nadu State should follow national guidelines as per the agricultural ceilings which the Union Government wanted to implement.

THE HON. THIRU K. MANOHARAN: Even for that, it is nothing wrong to have some views and ideas from the Central Government.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: நிலச் சீர்திருத்தம் பற்றி விரிவான சட்டம் கொண்டுவர இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் என்பது தற்போது நிலச் சொந்தக்காரர்களுக்கும், இடைத் தரகர்களாக இருக்கிற குத்தகைதாரர்களுக்கும்தான் கொண்டு வரப்படுகின்றன. நான் கேட்க விரும்புவது, நிலங்களில் அன்றாடம் வேலை செய்யும் விவசாயக் கூலிகள், 'ஆக்சுவல் ஒர்க்கர்ஸ்' அவர்களுக்கும் ஏதாவது நிவாரணம் கொண்டுவரும் வகையில், நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்படுமா என்பது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் கூறிய கருத்துக்களெல்லாம், இந்த நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் உருவாக்கப்படும்போது நினைவில் வைத்துக் கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: நம் தமிழ் நாட்டு நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கும், மத்திய அரசின் நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கும் உள்ள முக்கியமான வேறுபாடு நாம் ஒரு ஏக்கருடைய வருமானத்தின் அடிப்படையில் 'காம்பன்சேஷன்' நஷ்ட ஈடு தருகிறோம்; அவர்களோ கிஸ்தியின் அடிப்படையில் நஷ்ட ஈடு கொடுக்கிறார்கள். இது தான் இரண்டிற்குமுள்ள முக்கிய வேறுபாடு. எனவே நஷ்ட ஈடு, 'காம்பன்சேஷன்' கொடுப்பதில் மத்திய அரசாங்கத்தின் 'கைடுலைன்' எடுத்துக்கொண்டால், 10-ல் ஒன்றாக ஆகிவிடும் வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இந்த யோசனையும் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.40)

திரு. எம். சங்கரலிங்கம்: மத்திய அரசு, மாநில அரசுக்குத் தந்துள்ள 'கைட்லைன்ஸ்' என்ன என்பதை அரசு இந்த மாநில சட்ட அவையிலே ஒரு அறிக்கையாக வைக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இந்த யோசனையைத் தற்காலிகமாக ஏற்றுக்கொள்கிறேன். அவையில் வைப்பதா இல்லையா என்பதைப்பற்றி விரைவில் முடிவு எடுத்துச் சொல்கிறேன்.

'A' and 'B' Wing Teachers

* 133 Q—THIRU D. SANTOSHAM (on behalf of THIRU K. S. GANAPATHI): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that, the Director of School Education has directed the Chief Educational Officers in the Districts not to allow 'A' Wing teachers to work in 'B' Wing posts and *vice versa*, and

(b) if so, the action taken thereon by the Chief Educational Officers?

'ஏ', 'பி' பிரிவு ஆசிரியர்கள்

திரு. டி. சந்தோஷம் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 'ஏ' பிரிவு ஆசிரியர்கள் 'பி' பிரிவு பதவிகளிலும் 'பி' பிரிவு ஆசிரியர்கள் 'ஏ' பிரிவு பதவிகளிலும் பணியாற்ற அனுமதிக்க வேண்டா மென மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கு பள்ளிக் கல்வி இயக்குநர் உத்திரவிட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் மீது முதன்மைக் கல்வி அதிகாரிகள் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) அரசாணை நிலை எண் 761 கல்வித் துறை, நாள் 16—5—1970-ன் படி 'ஏ' பிரிவு ஆசிரியர்களை 'பி' பிரிவுக்கோ, 'பி' பிரிவு ஆசிரியர்களை 'ஏ' பிரிவுக்கோ மாற்றம் செய்யக் கூடாது. இருப்பினும் சில முதன்மைக் கல்வி அலுவலர்கள் 1970-76-ல் அத்தகைய மாற்றங்களைச் செய்துள்ளனர். 15—4—1977-ல் வெளியிட்ட அரசுக் குறிப்புரைகளின்படி இம்முறைகேட்டைச் சரிசெய்யும்படி முதன்மைக் கல்வி அலுவலர்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(இ) முதன்மைக் கல்வி அலுவலர் அரசுக் குறிப்புரைக்கேற்ப இம் முறைகேட்டைச் சரிசெய்து வருகின்றனர்.